# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# பதவி வெற்றிடம்

## உயிரி மருத்துவ பொறியியலாளர் (Bio Medical Engineer) பதவி

மேற்குறிப்பிட்ட பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (U.G.C) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளமாணி (B.Sc. Engineering) பட்டம் (மின்னணு/மின்சாரம்/இயந்திரவியல்/உயிரி மருத்துவ பொறியியல்).
- ECSL (Engineering Council Sri Lanka) அங்கத்துவம் (சான்றிதழ் மற்றும் பதிவு இலக்கத்துடன்).
- அனுபவம் ஒரு சிறப்புத் தகைமையாகக் கருதப்படும்.
- IESL சான்றிதழ் மேலதிக அனுகூலமாகக் கருதப்படும்.

**வயது** : 55 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : SL 1 தரம் III - ரூபா 110,720 - 10x3,230 - ரூபா 143,020/-

**வேலைவாய்ப்பு நிபந்தனைகள்** : ஒப்பந்த அடிப்படை.

அரசாங்க சேவையில் ஏற்கனவே பணியாற்றும் விண்ணப்பதாரர்கள், தமது விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும்.

தெரிவு செய்யப்படும் பட்சத்தில், விண்ணப்பதாரரை பணியிலிருந்து விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைவரால் வழங்கப்பட்ட சான்றிதழ் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

நியமனம் வழங்குவது அல்லது வழங்காமல் இருப்பது தொடர்பான முழுமையான அதிகாரம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபைக்கு உண்டு.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் தமது முழுமையான வாழ்க்கை வரலாற்றுத் தகவல்கள் (CV) மற்றும் உறவினர்கள் அல்லாத இருவர் (02) பற்றிய விபரங்களுடன் 23.02.2026 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழே உள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**

**03-02-2026**